www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

வீரகேசரி 14.12.85

# கொலையுண்ட தீவிர இளைஞர்களின் இறுதி ஊர்வலத்தில் பொதுமக்கள்

## இயக்க அணிவகுப்பு மரியாதையுடன் கொக்குவிலில் தகனம்! யாழ்நகரில் மாலை வரை தொடர்ச்சியான குண்டு வெடிப்பு

**யாழ்ப்பாணம், அரியாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட 'புளொட்' இயக்கத்தைச்சேர்ந்த மூன்று இளைஞர்களின் இறுதி ஊர்வலம் நேற்று கொக்குவிலில் ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் முன்னும் பின்னும் அணிவகுத்துச்செல்ல ஐநூறுக்கும் மேற்பட்ட பொது மக்களின் மௌனமான பங்களிப்புடன் நடந்தது.**

இயக்க முகாம் ஒன்றிலிருந்து ஆரம்பமான இந்த இறுதி ஊர்வலம் சுமார் ஒன்றரை மைல் தொலைவில் இருந்த கொக்குவில் மயானம் வரை சென்றது.

மயானத்தில் மூவரின் உடல்களும் சமயக் கிருத்தியங்கள் எதுவுமின்றி அந்த இயக்கத்துக்கே உரித்தான ஒரு புரட்சிகர தோரணையில் அணிவகுப்பு அஞ்சலியுடன் அருகருகே வைத்து தகனம் செய்யப்பட்டது.

இந்த இறுதி ஊர்வலம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் நடந்தது. எதுவித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை.

ஆயுதப்படையினரின் நடமாட்டமோ ரோந்து நடவடிக்கைகளோ நேற்று யாழ். நகரிலோ அல்லது இறுதி ஊர்வலம் நடந்த பகுதிகளிலோ இடம்பெறவில்லை. ஹெலிகொப்டர் ரோந்தும் காணப்படவில்லை.

கொக்குவிலைச் சேர்ந்த ரவிமூர்த்தி, கைதடியை சேர்ந்த ஜெகதீஸ்வரன், அரியாலையைச் சேர்ந்த பண்டா ஆகியோரே அரியாலையில் வைத்து மாற்று இயக்கம் ஒன்றால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

இந்த மூவரின் இறுதி ஊர்வலங்களும் அவர்களது சொந்த ஊர்களிலேயே நடத்தப்படும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பின்னர் இயக்கத்தின் உயர்மட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து கொக்குவிலில் ஒரே மயானத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாம்.

பிரேதங்கள் மூன்றும் மூன்று வாகனங்களில் வைக்கப்பட்டே எடுத்துச்செல்லப்பட்டன.

ஊர்வலத்தின் முன்னுக்கு சுமார் நூறு இளைஞர்கள் ஆயுதங்களை தாங்கிய வண்ணம் கறுப்பு சீருடை அணிந்தபடி அணிவகுத்து சென்றனர். தலையில் இரும்புத் தொப்பி அணிந்திருந்தனர்.

இவர்களுக்கு பின்னால் மூன்று பிரேத வண்டிகளும் அணிவகுத்துச் சென்றன.

இந்த வண்டிகளின் பின்னால் சுமார் 500 பொதுமக்கள் மௌனமே உருவாக சென்றனர்.

ஊர்வலத்தின் இறுதியில் இன்னும் பெரிய வாகனங்களில் ஆயுதபாணிகளான இளைஞர்கள் சென்றனர்.

### யாழ்நகர் வெறிச்சோட்டம்

இதற்கு முன்னர், நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ். நகருக்கு திடீரென வந்த ஆயுதபாணிகளான இளைஞர் கோஷ்டியொன்று குண்டுகளை வெடிக்கவைத்தது.

இதனால் ஏதோ விபரீதம் நடக்கிறதோ என பயந்து மக்கள் அங்கும் இங்குமாக சிதறி ஓடினர். கடைகளும் அடித்துப் பூட்டப்பட்டன.

அரியாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்களின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்து முகமாக திடீர் ஹர்த்தால் ஏற்பாட்டா இது என்று பலரும் அங்கலாய்த்தனர்.

ஆனால் அப்படியான அறிகுறி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வாகனங்கள் ஓடின, அவை நிறுத்தப்படவில்லை. நகரில் மக்கள் நடமாட்டத்தை நிறுத்தவே 'இந்த ஏற்பாடு என பின்னர் தெரிந்தது.

நகரிலும் சுற்றுப்புறத்திலும் அடிக்கடி குண்டு வெடிச்சத்தங்கள் கேட்டபடி இருந்தன.

இயக்க இளைஞர்கள் யாராவது மரணமடைந்தால் இரகசியமாகவே அவை தகனம் செய்யப்படும்.

ஆனால் வழமைக்கு மாறாக பிரேத ஊர்வலத்தோடு இறுதிக் கிரியைகளை செய்வதற்கு முன்னேற்பாடாக 'புளொட்' பாதுகாப்பை மேற்கொண்டதாக பின்னர் தெரியவந்தது.

கொக்குவிலில் மரண ஊர்வலம் நடப்பதை அறிந்து ஆயுதப்படையினர் வராமல் இருந்து வருவதைத் தடுக்கவே யாழ் நகரில் இந்த குண்டுகள் வெடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மரண ஊர்வலம் கொக்குவிலில் நடந்து முடியும் வரை யாழ் நகரிலும் சுற்றுப்புறங்களிலும் இந்த குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனால் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஆயுதப்படையினர் நேற்று ரோந்து செய்யப் புறப்படவில்லை.

யாழ் நகரும் ஹர்த்தால் தினம் போல் வெறிச்சோடிக் கிடந்தது.

☆ அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம் ☆

People's Liberation Organization of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, U.K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்